# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,910 — 1932 ம் ஹூ பங்குனிமீ 4 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### பிழைதிருத்தம்.

இத்தால் அறியத்தருவது 1932 ம் ஆண்டு மாசி மாதம் 19 ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாட்சி "கெசற்" பத்திரிகை நெம். 7,907 யில், நான்காம் பாகம் 57, 58 ம் பக்கங்களில் திரிகோணமலை 25 ம் நெம். காணி விற்பனைவைப் பற்றி "தரிப்புவிலை" என்னும் சொற்களுக்காக "தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு" என்று பிழையாயிருக்கின்றது.

நொத்தீசில் விளம்பரப்படுத்தியது தரிப்புவிலை முளுக்கண்டத்துக்குமேயொழிய ஒரு ஏக்கருக்கல்ல.

காணிக் காரியகர்த்தர் கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ஆண்டு மாசிமீ 26 ந் தேதி.

சி. வி. பிறெயின்,
காணிக் காரியகர்த்தர்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென்புறத்து மாறும் வழியில் 2 விசேஷமான கோபுரங்கள் கட்டும்படிக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது:—

பிரதமபடத்து இல. 20,309. குறிச்சி—வலானை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம் ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அற்றிக்ககஹவத்தை வரி இல. 185 | 40 வயதுள்ள 1 தென்னமரமும், 10 வயதுள்ள 1 தென்னமரமும், 3 தென்னமரத்தின் கொட்டுகளும், பாதிக்கிடங்கும் அடங்கிய தென்னந்தோட்டம் | ஹொறணையிலிருக்கும் ஆர். பீ. கருணாரத்தின என்பவரின் மனைவி | 0 | 0 | 8 8 |
| 2 | ஷை .. | 2 தென்னமரத்தின் கொட்டுகளும், ஒரு உருக்குக் கோபுரமும் அடங்கிய தென்னந்தோட்டம் | ஷை .. | 0 | 0 | 9·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1932 ம் ஹூ பங்குனிமாசம் 31 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத்தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

எல். எல் ஹான்றர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

களுத்துறைக் கச்சேரி,
1932 ம் ஹூ மாசிமீ 27 ந் உ

73 —— J. N. 17375—120 (2/32)

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இப்போதிருக்கும் ரேட்டைப் பிரபலிகக மான ரேட்டின நிலைக்குக் கொண்டுவருவது என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 969 ம் இலக்கக் கடைசிக் கிராமப்படத்து 2 ம் அநுபந்தம். குறிச்சி—வடமேல் மாகாணத்தில் குருநாகல் டிஸ்திறிக்கில், கற்றுகம்பெல கற்பத்துவில், யற்றிககக கோறளை தெற்கிலிருக்கும் யக்கறவத்த.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 6 K | — .. | ரேட்டு .. | யக்கறவத்தவைச்சேர்ந்த பி. எம். புஞ்சி எத்தன | 0 | 0 | 18·5 |
| 6 L | — .. | ரேட்டு .. | யக்கறவத்தவைச்சேர்ந்த பி. எம். டாவித் அப்புகாமி | 0 | 0 | 3·6 |
| 6 F1 | — .. | ரேட்டு .. | யக்கறவத்தவைச்சேர்ந்த பி. எம். புஞ்சி எத்தன | 0 | 0 | 2·2 |
| 6 E1 | — .. | ரேட்டு .. | யக்கறவத்தவைச்சேர்ந்த பி. எம். உக்கு பண்டா, பி. எம். றம்மெனிக்கா, பி. எம். அப்புகாமி, பி. எம். உக்குமெனிக்கா, பி. எம். ஜேம்ஸ் சிங்கோ, பி. எம். றண்டொகாமி, பி. எம். செலோகாமி, பி. எம. ஜேன்நோனு, பி எம். மெஞ்சொகாமி | 0 | 0 | 11·8 |
| 6 D1 | — .. | ரேட்டு .. | நீர்கொழும்பைச்சேர்ந்த ஆதர் செனவிரத்ன .. | 0 | 0 | 18·4 |
| 6 B1 | — .. | ரேட்டு .. | யக்கறவத்தவைச்சேர்ந்த பி. எம். றம்மெனிக்கா | 0 | 0 | 4·5 |
| 1 E1 | — .. | ரேட்டு .. | ஷை .. .. | 0 | 0 | 1 |
| 1 E2 | — .. | ரேட்டு .. | ஷை .. .. | 0 | 0 | 8·4 |
| 1 E3 | கொதகெனெவத்த .. | வெளியான வெண் நிலம் | யக்கறவத்தவைச்சேர்ந்த பி. எம். றம்மெனிக்கா | 0 | 0 | 2·2 |
| 1 G1 | ஹக்கூற்றுவகேனெவத்த அல்லது இல்லுகவத்த | தென்னந்தோட்டம் | நீர்கொழும்பைச்சேர்ந்த ஏ. செனவிரத்ன அவர்கள் | 0 | 1 | 7·6 |
| 1 G2 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 2·5 |
| 5 A1 | விகாறெகந்த .. | பற்றைக்காடு .. | விகாறெகந்த கோயிலின் பொறுப்பாளர்கள் ... | 0 | 0 | 19·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புகொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாசம் 6 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு டண்டகமுவ வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1932 ம் ஆண்டு மாசி (பெப்ரவரி)மீ 25 ந் உ.

ஜே. ஆர். வோல்ரர்ஸ்,
வடமேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்கள்.

மட்டக்களப்பு உப்புக் குதத்திலிருந்து கல்முனை உப்புக் குதத்துக்கு, 7,400 அந்தர் உப்பும் அக்கரைப்பத்துக்கு 2,000 அந்தர் உப்பும், பொத்துவிலுக்கு 600 அந்தர் உப்பும், 1932ம் ஆண்டு சித்திரை மாசம் 8 ந் திகதிக்கும் மார்கழி மாசம் 15ந் திகதிக்கும் இடையில் கொடுபோய் ஒப்புக் கொடுப்பதற்கு கேள்விக் கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. குறித்த ஒவ்வொரு குதங்களுக்கும் ஒரு அந்தர் நிறுத்து அடுக்குஞ் செலவுசேர்ந்து என்னவீத கூலிக்கு ஏற்றக்கூடுமென்று கேள்விக்கடதாசியில் காட்டப்படவேண்டும்.

3. கேள்விக் கடதாசியின் உறை இடப்பக்க மூலையில் "உப்பு ஏற்றக் கேள்விக் கடதாசி" என்று எழுதப்படல் வேண்டும். கேள்விக் கடதாசிகள் கிழக்கு மாகாண மட்டுக்களப்பு ஏசன்று கந்தோரில் 1932 ம் ஆண்டு பங்குனி மாசம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல் சேர்க்கப்பட வேண்டும்.

4. கேள்விக் கடுதாசிகள் போமில் எழுதியிருக்க வேண்டும். போம் மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். குறிக்கப்பட்ட போமில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. கேள்விப்போம் பெறுவதற்கு ரூபா 50 எந்தக் கச்சேரியிலாவது கட்டிப் பற்றுத்துண்டு காண்பிக்க வேண்டும். கிழக்கு மாகாண ஏசன்றரால் அல்லது சரியான தத்துவம் பெற்ற அவரின் பதிலாளால் கேள்வி ஏற்றுக்கொள்ளப் பட்டதென்று எழுத்தி லறிவித்தல் பெற்ற ஏழு நாட்களுள் ஒப்பந்தம் அல்லது உறுதிமுடிக்க அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணைகொடுக்கத் தவறினால் கட்டிய பணம் ரூபா 50 அரசாட்சியாரால் பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத்தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளிற் தவறுசெய்தவராய்க் கவனிக்கப்பட்டு அரசாட்சி ஒப்பந்த வேலைகளில் இனிச் சேர்மான மில்லாதவராய்க் கழிக்கப்பட்டு இடாப்பில் சேர்க்கப்படக் கூடியவராயிருப்பார் ஒப்பந்தத்திற்கு கையொப்பமிட்டதன்மேல் கட்டிய ரூபா 50 திரும்பக் கொடுக்கப்படும்.

6. ஒப்பந்த வேலையை நடப்பிப்பதற்குப் பிணைகாரராய் வருவோமென்று சம்மதம் சொல்லித் தங்கள் மேல்விலாசங்கள் சொத்துக்கும் இரண்டு தக்கமனிதர்களால் கையொப்பமிட்ட கடிதமொன்று ஒவ்வொரு கேள்விக்கடதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் காசு ரூபாய் 1,000 பிணைகட்ட வேண்டும். காசில்லாமல் ஆதனப் பிணையாய்க் கொடுக்கிறதாகில் தாய் உறுதிகள் கொண்டு வரும்பொழுது உறுதியின் பெலப்பைப்பற்றி இராசாவின் தரணியிடமிருந்து ஒரு சேட்டுபிக்கேற்றும் ஆதனம் ஈடு ஒற்றி மற்றும் தடை பிசகில்லை என்றும் காணிப்பதிவுக் கந்தோர் றெசிஸ்திறார் இடம் ஒரு றிப்போட்டும் கொண்டுவர வேண்டும். ஆதனத்தின் பெறுமதியையிட்டு வன்னியனாரிடம் றிப்போட்டும் தேவை.

8. கிழக்கு மாகாண ஏசன்றருக்குக் கேள்வி அனுப்பும் போதே அக்கேள்வியின் கொப்பி ஒன்று கேள்விக்காரனால் தபால் மூலமாய் அரசிறை பண வருமான, அரசாங்க தேவைப் பாதுகாவலருக்கு (Controller of Finance and supplies) அனுப்பப்படல் வேண்டும்.

9. நியமிக்கப்பட்ட கழிவுக்குமேல் ஏதாவது குறையிருக்குமானால் ஒரு அந்தருக்கு ரூபாய் மூன்று சதம் 36 (முப்பத்தாறு) வீதம் கொந்திறாத்துக்காரன் கட்டவேண்டும்.

10. வேறு தேவையான விளம்பரங்கள் மட்டுக்களப்புக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

11. அரசாட்சியார் ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட ஏதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒன்றிலும் தனித்தும் வேறு ஆட்களுடனாவது கொடுக்கப்படமாட்டாது. அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரரின் அழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் ஏதொருவரையும் அல்லது கீழ்மாகாண ஏசென்றர் அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களி நிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலைசெய்ய நியமிக்கப்படாது.

12. மேற்கூறிய கட்டுப்பாடுகள் யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விகளொன்றும் கவனிக்கப்படமாட்டாது. கேள்விகளி லொன்றை அல்லது எல்லாவற்றையுங் கையேராமல் தள்ளிவிட அல்லது ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையாவது ஏற்க அரசாட்சியாருத் தத்துவமுண்டு.

சீ. எச். ஹார்ட்வெல்,
கீ. மா. அரசாட்சி ஏசன்றுத்துரை யவர்களுக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1932 ம் ஆண்டு பங்குனிமீ 1 திகதி.

நிலாவெளி உப்புக் குதத்திலிருந்து மட்டக்களப்பு உப்புக் குதத்திற்கு 25,000 அந்தர் சொரியல் உப்பு 1932 ம் ஆண்டு வைகாசி மாதம் 1 ந் திகதிக்கும் ஆடி மாசம் 31 ந் திகதிக்கு மிடையில் அதாவது 8,000 அந்தர் வைகாசி மாசம் 31 ந் தேதிக்கு முன்னும், 8,000 அந்தர் ஆனி மாசம் 30 ந் திகதிக்கு முன்னும் மீதி 9,000 அந்தர் ஆடி மாசம் 31 ந் திகதிக்கு முன்னுமாய்க் கொண்டுபோவதற்குக் கேள்விக் கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. நிலாவெளியிலிருந்து ஒரு அந்தர் நிறுத்து அடுக்குச் செலவு சேர்த்து என்னவீத கூலிக்கு ஏற்றக்கூடுமென்று கேள்விக்கடதாசியில் காட்டப்படவேண்டும்.

3. கேள்விக்கடுதாசியின் உறை இடப்பக்கமூலையில் உப்பு ஏற்றக் கேள்விக் கடுதாசியென்று எழுதப்படல்வேண்டும். கேள்விக்கடுதாசிகள் கிழக்கு மாகாண அரசாட்சி ஏசன்று அவர்களின் மட்டக்களப்பு கந்தோரில் 1932 ம் ஆண்டு பங்குனி மாசம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேர்க்கப்படல் வேணடும்.

4. கேள்விக்கடுதாசிகள் போமில் எழுதப்படல்வேண்டும். அப் போம் மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப்பெற்றுக் கொள்ளலாம். குறிக்கப்பட்ட போமில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. கேள்விப் போம் பெறுவதற்கு ரூபாய் 50 எந்தக் கச்சேரியிலாவது கட்டிப் பற்றுத்துண்டு காண்பிக்கவேண்டும். கிழக்கு மாகாண ஏசன்றரால் அல்லது சரியான தத்துவம் ஏற்றவரின் பதில் ஆளால் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று எழுத்தில் அறிவித்தல் பெற்ற ஏழு நாட்களுள் ஒப்பந்தம் அல்லது உறுதிமுடிக்க அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணைகொடுக்கத் தவறினால் கட்டிய பணம் ரூபா 50 ம் அரசாட்சியாரால் பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத் தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளிற் தவறுசெய்தவராய்க் கவனிக்கப்பட்டு அரசாட்சி ஒப்பந்த வேலைகளில் இனிச் சேர்மானமில்லாதவராய்க் கழிக்கப்பட்டு இடாப்பில் சேர்க்கப்படக் கூடியவராயிருப்பார். ஒப்பந்தத்திற்குக் கையொப்பமிட்டதின்மேல் கட்டிய ரூபா 50 திரும்பக் கொடுக்கப்படும்.

6. ஒப்பந்த வேலையை நடப்பிப்பதற்குப் பிணைகாரராய் வருவோமென்று சம்பந்தஞ் சொல்வித் தங்கள் மேல்விலாசங்களை கொடுக்கும் இரண்டு தக்க மனிதர்களால் கையொப்பமிட்ட கடிதமொன்று ஒவ்வொரு கேள்விக் கடதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

7. ஒப்பந்தவேலை சரிவர நிறைவேற்றுவதற்காய் கொடுக்கும் உறுதியில் போதிய பிணைகாரர் சேரல்வேண்டும். உறுதியின் தொகையையும் வேறு தேவையான விளம்பரங்களும் மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

8. கிழக்கு மாகாண ஏசன்றருக்குக் கேள்வி அனுப்பும்போது அக்கேள்வியின் கொப்பியின் ஒன்று கேள்விக்காரனால் தபால்மூலமாய் அரசிறை பண வருமான, அரசாங்க தேவைப் பாதுகாவலருக்கு (Controller of Finance and supplies) அனுப்பப்படல் வேண்டும்.

9. மேற்கூறிய கட்டுப்பாடுகள் யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விகளொன்றும் கவனிக்கப்படமாட்டாது.

10. அரசாட்சி ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட ஏதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒற்றும் தனித்தும் வேறு ஆட்களுடனுவது கொடுக்கப்படமாட்டாது. அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரரின் கழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் ஏதொருவரையும் அல்லது கீழ்மாகாண ஏசென்றர் அவர்கள் தயக்குத் தெரித்த போதிய விஷயங்களினிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலைசெய்ய நியமிக்கப்படாது.

11. கேள்விகளிலொன்றை அல்லது எல்லாவற்றையுங் கவனிக்க அல்லது ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையாவது ஏற்க அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

சீ. எச். ஹார்ட்வெல்,
கீ. மா. அரசாட்சி ஏசன்றுத் துரையவர்களுக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1932 ம் ஆண்டு பங்குனிமீ 1 ந் திகதி.

---

## சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: புதுக்கடை நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் புத்தளம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1932 ம் ஆண்டு பங்குனி மாதம் 21 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
கே. ஆள்வாபிள்ளை,
உப பிஸ்கால்.

புத்தளம் உபபிஸ்கால் கந்தோர்,
1932 ம் ௵ மாசிமீ 23 ௳.